**ஸ்ரீ நிகேதன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி**

எண்.1, சிவா விஷ்ணு கோயில் தெரு, இராஜாஜிபுரம், திருவள்ளூர்.
தொலைபேசி : 044-27665757 / 27665459 / 9942927117

SHREE NIKETAN
Indian Roots. Global Outlook
CBSE & Matriculation Schools

**ஸ்ரீ நிகேதன் பாடசாலை (CBSE)**

வேடங்கி நல்லூர், திருப்பாச்சூர் அஞ்சல், திருவள்ளூர். மற்றும்
மண்ணிவாக்கம், மேற்குத் தாம்பரம் & வெங்கம்பாக்கம், கிழக்குத் தாம்பரம்





## தெய்வத் திருமதி. சகுந்தலாம்மாள் நினைவு

# 11-ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சிப் போட்டிகள்

11 -ஆம் ஆண்டு விழா

**இடம் : ஸ்ரீ நிகேதன் நிறைநிலைப் பள்ளி, திருவள்ளூர்.**
**நாள் : 30.04.2022 சனிக்கிழமை**
**நேரம் : காலை 8.30 மணி**



**சிலம்புச் செல்வர்.**
**தமிழ்த்திரு. மா.பொ.சிவஞானம்**

தலைநகரை மீட்ட தமிழனாம் !
தன்மானம் காத்த தலைவனாம் !
சென்னை சால்வன் குப்பத்தில் பிறந்தவராம் !
சிவஞானம் என்னும் பெயர் கொண்டவராம் !
படித்ததோ வகுப்பு மூன்று வரையாம் !
பட்டமோ சிலம்புச் செல்வர் என்பதாம் !
உரிமைக்கு எல்லை வேங்கடம் !
உறவுக்கு எல்லை இமயம் என்றவராம் !
மெட்ராஸ் எமதே என்ற ஆந்திரர்களை !
தலைநகர் தமிழர்களுக்கே என்றவராம் !
தலையைக் கொடுத்தேனும் !
தலைநகரைக் காப்போம் என முழங்கினவராம் !
எல்லையைக் காப்பதில் வல்லவராம் !
இலக்கியத்தின் மீது ஈர்ப்புக் கொண்டவராம் !
சிலப்பதிகாரம் மீது கொண்ட காதலால் !
சிறையிலேயே அதைப் படித்தவராம் !
மீசைக்காரன் என்பது இவரின் "பட்டப்பெயராம்"
சிலம்புச்செல்வன் என்பதும் இவரின் "பட்டப்பெயராம்" !
மாலவன் குன்றம் போனாலென்ன
வேலவன் குன்றமாவது வேண்டுமென்றவராம் !
வ.உ.சி யையும், வீரபாண்டிய கட்டபொம்மனையும்
தன் எழுத்துமூலம் அறிமுகப்படுத்தியவராம் !
தமிழ், தமிழர், தமிழ்நாடு என்றே வாழ்ந்தவராம் !
தமிழுக்காகவே தன்னுயிரையும் ஈந்தவராம் !
மாண்டாலும் உம்புகழ் மறையாதாம்...
நினைவு கூறுவோம் உம்மை எந்நாளும்... ! ! !

**சிலம்புச் செல்வர். தமிழ்த்திரு. மா.பொ.சிவஞானம்** ஐயா அவர்களின் தமிழ்த் தொண்டினைப் போற்றும் வகையிலும், ஸ்ரீ நிகேதன் பள்ளிக் குழுமம் உருவாகக் காரணமான **தெய்வத்திருமதி.சகுந்தலாம்மாள்** அவர்களின் நினைவாகவும், ஆங்கில வழிப் பள்ளியிலும் தமிழ்மொழியே தலைமை ஏற்று நிற்கும் என்பதை மெய்ப்பிக்கும் வகையிலும், **தெய்வத்திருமதி.சகுந்தலாம்மாள்** நினைவு தமிழ் வளர்ச்சிப் போட்டியினை எல்லாம் வல்ல தமிழ் அன்னையின் அருளோடு 11-ஆண்டுகளாக தொடர்ந்து சிறப்புடன் நடத்தி வருகின்றோம்.

சிறு தீப்பொறியாகத் தொடங்கிய இத்தமிழ் உணர்வு வருங்கால மாணவர்களிடையே காட்டுத்தீயாகப் பரவி தமிழின் புகழை உலகறியச் செய்யும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இச்சிறு தீப்பொறி பரவும் நாளாம் 30.04.2022 சனிக்கிழமை அன்று மாநில அளவில் நடைபெறும் இப்போட்டிகளில் தங்கள் மாணவச் செல்வங்களைப் பங்கேற்கச் செய்து பரிசும் பாராட்டும் பெற, தமிழ் உணர்வுடன் அழைக்கின்றோம்.

மாணவச் செல்வங்களை அன்புடன் வரவேற்கும்.... **ப. விஷ்ணுசரண்,**
தாளாளர், ஸ்ரீ நிகேதன் பள்ளிக் குழுமம்.



## 1. திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி (தனிநபர்)

| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | LKG-UKG | அதிகாரம் எண் - 1. கடவுள் வாழ்த்து |
| II | 1 - 2 | அதிகாரம் எண் - 13. அடக்கமுடைமை<br>அதிகாரம் எண் - 14. ஒழுக்கமுடைமை |
| III | 3 - 5 | அதிகாரம் எண் - 23. ஈகை<br>அதிகாரம் எண் - 95. மருந்து<br>அதிகாரம் எண் - 104. உழவு |



### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் அதிகாரங்களை மனனம் செய்து, 4 நிமிடத்திற்குள் ஒப்புவித்தல் வேண்டும்.
- உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வு, நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

## 2. பேச்சுப் போட்டி (தனிநபர்)

| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 1 | அன்பே அச்சாணி! |
| II | 2 | அறம் செய்! |
| III | 3 | எங்கும் தமிழ்! |
| IV | 4 | இணையவழிக் கல்வியும்-இணையாத குழந்தைகளும்! |
| V | 5 | துரித உணவும்-துரித முடிவும்! |
| VI | 6 | அறிவியலும்-ஆன்மீகமும்! |
| VII | 7 | நேர்மையால் உயர்ந்தவர்கள்! |
| VIII | 8 | மாற்றுத்திறனாளிகளை மனதார நேசி! |
| IX | 9 | உலகத்தின் பார்வையில் தமிழ்! |
| X | 11 | கிராமங்களைத் தேடும் நகரவாசிகள்! |





### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது பேச்சு அமைந்திடல் வேண்டும்.
- பேச்சுப்போட்டி எடுத்தல், தொடுத்தல், முடித்தல் என்பதன் அடிப்படையில் கருத்து, குரல் ஏற்றத்தாழ்வு, நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- 100 விழுக்காடு சொந்த படைப்பாகவே இருத்தல் வேண்டும்.
- நிலைக்கு 2 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.



# 3. இசைப் போட்டி (தனிநபர்)









| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 4 – 5 | தமிழ்ப் பாரம்பரிய இசைக் கருவிகள் அல்லது நவீன இசைக் கருவிகள் |
| II | 6 – 7 | தமிழ்ப் பாரம்பரிய இசைக் கருவிகள் அல்லது நவீன இசைக் கருவிகள் |
| III | 8 – 9 | தமிழ்ப் பாரம்பரிய இசைக் கருவிகள் அல்லது நவீன இசைக் கருவிகள் |

## போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது இசை அமைந்திடல் வேண்டும்.
- துணை இசையினை மற்றொருவர் மீட்டுதல் கூடாது.
- நற்கருத்துப் பாடலோ அல்லது தாள நடையோ மீட்டுதல் வேண்டும்.
- நற்கருத்தினைக் கொண்டிராத திரைப்படப் பாடல்களின் இசையினை மீட்டுதல் கூடாது.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.





# 4. நடனப் போட்டி (தனிநபர்)

| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 1 – 2 | தமிழர்களின் பாரம்பரிய நடனம் (ஏதேனும் ஒன்று) |
| II | 3 – 5 | தமிழர்களின் பாரம்பரிய நடனம் (ஏதேனும் ஒன்று) |
| III | 6 – 8 | பரதம் (அல்லது) நாட்டுப்புற நடனம் |
| IV | 9 – 12 | பரதம் (அல்லது) நாட்டுப்புற நடனம் |

## போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது நடனம் அமைந்திடல் வேண்டும்.
- ஒப்பனை, உபகரணங்கள், கருத்துரு, நடனத்தில் நயம், நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- தமிழின் பெருமை, இயற்கை, இறைபக்திப் பாடல்கள் மட்டுமே நடனத்தில் இடம்பெற வேண்டும்.
- நிலைக்கு 2 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

## 5. தனிநபர் மாறுவேடப் போட்டி

| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | LKG | பலன் தரும் பழங்கள் ! |
| II | UKG | கப்பலோட்டியத் தமிழன் ! |
| III | 1 | மகாபாரதக் கதாபாத்திரங்கள் ! |
| IV | 2 | உலகத் தலைவர்கள் ! |



### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் மாறுவேடம் பூண்டு அதனடிப்படையில் மூன்று நிமிடத்திற்குள் தங்களது கதாபாத்திரம் குறித்து நிகழ்வு அமைந்திடல் வேண்டும்.
- ஒப்பனை, ஆடை அமைப்பு, சொற்பொழிவு, உடல் அசைவு மொழி, நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.




## 6. கதை கூறல் போட்டி (தனிநபர்)


| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 1 | திருக்குறள் கதைகள் |
| II | 2 | பழமொழிக் கதைகள் |
| III | 3 | நன்னெறிக் கதைகள் |
| IV | 4 | நகைச்சுவைக் கதைகள் |
| V | 5 | தத்துவக் கதைகள் |

### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது கதை அமைந்திடல் வேண்டும்.
- உடல் அசைவு மொழி வெளிப்பாடு, குரல் நயம், நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

## 7. கவிதை கூறல் போட்டி (தனிநபர்)


| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 6 | வேர்களைத் தேடி ! |
| II | 7 | அல்லல் தரும் அலைபேசி ! |
| III | 8 | மனிதா வாழு ! வாழவிடு... |
| IV | 9 | கொட்டித் தீர்த்து விடு ! (மாணவர் விருப்பம்) |



### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது கவிதை அமைந்திடல் வேண்டும்.
- கவிதை நயம், குரல், ஏற்றத்தாழ்வு, நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- 100 விழுக்காடு சொந்தப் படைப்பாகவே இருக்க வேண்டும்.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.



## 8. பாட்டுப் போட்டி (தனிநபர்)



| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 1 - 3 | கவிமணி பாடல்கள் ! |
| II | 4 - 5 | தமிழ் வளர்ச்சிப் பாடல்கள் ! |
| III | 6 - 8 | நாட்டுப்புறப் பாடல்கள் ! |
| IV | 9 - 10 | கண்ணதாசன் தத்துவப் பாடல்கள் ! |
| V | 11 - 12 | சொந்தமாக பாடல் இயற்றிப் பாட வேண்டும் |



### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது பாடல் அமைந்திடல் வேண்டும்.
- இசைக்கருவிகளை இசைத்தல், இசைத் தட்டு பயன்படுத்திப் பாடுதல் கூடாது, கருத்து, குரல் வளம், இராகம், தாளம், உச்சரிப்பு, பாடலைப் பார்க்காமல் பாடுதல், நேர மேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- சமூக நற்கருத்துகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.







## 9. கைவினைக் கலை (தனிநபர்)

| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 4 - 5 | ஏதேனும் ஒரு கைவினைப் பொருள் செய்தல் |
| II | 6 - 8 | ஏதேனும் ஒரு கைவினைப் பொருள் செய்தல் |
| III | 9 - 12 | ஏதேனும் ஒரு கைவினைப் பொருள் செய்தல் |



### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் தேவையான பொருட்களை மாணவர்கள் கொண்டுவர வேண்டும்.
- 100 விழுக்காடு சொந்தப் படைப்பாகவே இருத்தல் வேண்டும்.
- நெகிழிப் பொருட்கள் கட்டாயம் பயன்படுத்தக் கூடாது.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.



## 10. ஓவியப் போட்டி (தனிநபர்)

| நிலை | வகுப்பு | தலைப்பு |
|---|---|---|
| I | 1 - 3 | இயற்கை |
| II | 4 - 5 | தேசத் தலைவர்கள் |
| III | 6 - 7 | கொரானா விழிப்புணர்வு ஓவியம் |
| IV | 8 - 9 | கோயில் சிற்பங்கள் |



### போட்டிக்கான விதிமுறைகள்

- ஓவியம் சொந்தப்படைப்பாக மட்டுமே இருத்தல் வேண்டும்.
- தாங்கள் வரையும் ஓவியம் இணையத்திலோ அல்லது வேறெந்த போட்டிகளிலும் பயன்படுத்தாத ஓவியமாக இருத்தல் வேண்டும். சொந்தமாக முயற்சி செய்து ஓவியம் வரைதல் வேண்டும்.
- கால அளவு 1 மணி நேரம்
- ஓவியத்திற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் மாணவர்களே கொண்டு வர வேண்டும்.
- வரை படத்தாள் மட்டுமே பள்ளி வழங்கும்.
- நிலைக்கு 3 மாணவர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

## 11. பெற்றோர் கருத்துரை

**தலைப்பு : அலைபேசியால் அல்லல்படும் பெற்றோர்கள்...**

### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது கருத்துரை (பேச்சு) அமைந்திடல் வேண்டும்.
- உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வு, நேரமேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- 100 விழுக்காடு சொந்தப் படைப்பாகவே இருத்தல் வேண்டும்.
- நிலைக்கு 3 பெற்றோர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.





## 12. ஆசிரியர் கருத்துரை

**தலைப்பு : இணையவழிக் கல்வியில் நான்...**

### போட்டிக்கான விதிமுறைகள்

- கொடுக்கப்பட்ட தலைப்பின் கீழ் நான்கு நிமிடத்திற்குள் தங்களது கருத்துரை (பேச்சு) அமைந்திடல் வேண்டும்.
- உச்சரிப்பு, குரல் ஏற்றத்தாழ்வு, நேரமேலாண்மை ஆகியன மதிப்பெண் வழங்குவதில் கவனத்தில் கொள்ளப்படும்.
- 100 விழுக்காடு சொந்தப் படைப்பாகவே இருத்தல் வேண்டும்.
- பள்ளியின் சார்பில் 3 ஆசிரியர்கள் மட்டுமே பங்கேற்க வேண்டும்.

குறிப்பு :

நேரடியாக திருவள்ளூர் ஸ்ரீ நிகேதன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில்
30.04.2022 சனிக்கிழமை அன்று போட்டிகள் நடைபெறும்.

**பதிவு செய்ய கடைசி நாள் 22.04.2022 வெள்ளிக்கிழமை.**



| மொத்த போட்டிகள் - 12 | பிரிவுகள் - 50 |
|---|---|
| முதல் பரிசு - 50 | இரண்டாம் பரிசு - 50 |
| மூன்றாம் பரிசு - 50 | சிறப்புப் பரிசு - 15 |
| ஆறுதல் பரிசு - 15 | தனிநபர் வாகை சூடி - 12 |

பள்ளி வாகை சூடி - 03

அதிக மாணவர்கள் பங்கேற்கும் பள்ளி விருது - 03

சிறந்த ஊக்குவிப்பு ஆசிரியர் விருது - 03

குறிப்பு :

- பங்கேற்பாளர் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்படும்
- தனிநபர் வாகைசூடி விருதும் வழங்கப்படும்.
- போட்டியில் கலந்து கொள்ளும் தங்களது பள்ளி மாணவர்களின்
- பெயர்ப் பட்டியலை smt.sakunthalaammal.pottigal22@gmail.com மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மாணவர்களின் பெயரினை குறிப்பிடும்பொழுது தலைப்பெழுத்து தமிழில் தட்டச்சு செய்து அனுப்ப வேண்டுகின்றோம்.

தொடர்புக்கு :
திருக்குறள் செம்மல் **க. செந்தில் குமார்,** தமிழாசிரியர்
கைப்பேசி : 93853 61193 / 99429 27117

மின்னஞ்சல் முகவரி :
**smt.sakunthalaammal.pottigal22@gmail.com**



SHREE NIKETAN
Indian Roots. Global Outlook
CBSE & Matriculation Schools



**கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்**

**மரம் நடுவோம் ! மழை பெறுவோம் !!**

SHREE NIKETAN
Indian Roots. Global Outlook
CBSE & Matriculation Schools

## தெய்வத் திருமதி. சகுந்தலாம்மாள் நினைவு

# 11-ஆம் ஆண்டு
# தமிழ் வளர்ச்சிப் போட்டிகள்

**இடம் : ஸ்ரீ நிகேதன் நிறைநிலைப் பள்ளி, திருவள்ளூர்.**
**நாள் : 30.04.2022 சனிக்கிழமை**




**அனைத்து போட்டிகளும் நேரடியாக**
**திருவள்ளூர் ஸ்ரீ நிகேதன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் மட்டுமே நடைபெறும்.**

1. திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி
2. பேச்சுப் போட்டி
3. இசைப் போட்டி
4. நடனப் போட்டி
5. தனிநபர் மாறுவேடப் போட்டி
6. கதை கூறல் போட்டி
7. கவிதை கூறல் போட்டி
8. பாட்டுப் போட்டி
9. கைவினைக் கலை போட்டி
10. ஓவியப் போட்டி
11. பெற்றோர் கருத்துரை சிறப்புப் போட்டி
12. ஆசிரியர் கருத்துரை சிறப்புப் போட்டி






**12 போட்டிகள் | 50 நிலைகள் | 250 பரிசுகள்**

## முதல் பரிசு
ரூ.750 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்

## இரண்டாம் பரிசு
ரூ.500 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்

## மூன்றாம் பரிசு
ரூ.300 மற்றும் பாராட்டுச் சான்றிதழ்

பதிவு செய்ய எங்கள் இணையத்தை தொடர்புகொள்ளவும் :
**www.shreeniketanschools.org**

தொடர்புக்கு :
கைப்பேசி : 93853 61193 / 99429 27117
மின்னஞ்சல் முகவரி : smt.sakunthalaammal.pottigal22@gmail.com